1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு நிறையப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளவிருக்கிறோம். இந்த மாதிரி எழுந்திருக்கக் கூடாது.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீரை, கேரள மாநிலத்திற்குத் திருப்ப, கேரள அரசு டெண்டர் கோரியிருப்பதாகக் கூறப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக— கேரள எல்லையையொட்டி தமிழகத்திலே இருக்கக் கூடிய பாண்டியாறு—புன்னம்புழா ஆறுகளை, நீலகிரி மாவட்டம் தேவாளாவிலிருந்து சுரங்கப் பாதை மூலம் கேரள மாநிலத்திற்குத் திருப்பி விடுவதற்காகக் கேரள அரசு திட்டமிட்டிருப்பதைக் குறித்து ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று திரு. வி. கே. லட்சுமணன் அவர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, கோவை, பேட்டுப் பாளையம், அவிநாசி, திருப்பூர், பல்லடம் ஆகிய தாலுக்காக்களில் வாழ்கிற விவசாயிகளுடைய வாழ்வா, சாவா என்ற ஒரு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுவதற்கு அனுமதி கொடுத்தமைக்கு நான் என்னுடைய.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேச வேண்டாம். நிறையப் பிரச்சினைகள் இன்றைக்கு எடுத்திருக்கிறோம். அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசினால் அதற்குப் பதில் வாங்கிவிடலாம்.

திரு. வி. கே. லட்சுமணன்: 26—ந் தேதி அன்றைக்கு மத்திய நீர்வள இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில், கோவை மாவட்டம் 87 சதவீதம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விட்டது. 1997 ஆம் ஆண்டு அது 90 சதவீதமாக உயர்ந்து விடும். இந்த மாவட்டத்திலே 8 வட்டாரங்களைக் கரும்பு வட்டாரங்கள் என்று அறிவித்து, இவை விரைவிலே பாலைவனமாகிவிடும் என்று சொல்லியிருக்கிறது. இந்த நேரத்திலே கேரள மின்சார வாரியம் ஒரு டெண்டரை அறிவித்தது. அந்த டெண்டர் நம்பர் 1/ஈஈ/கே.சி.டி./1993—94. இந்த டெண்டர் எதற்காக வரவழைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான் அதை ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன்,

[திரு. வி. கே. லட்சுமணன்] [1993 அக்டோபர் 29

..N me of the work : Pandiyaru—Punnampuzha High Head HE Scheme—T king bore holes using contractor's own diamond drill, pumpset and all other accessories along the alignment of opencut channel and Tunnel at Devala area in Tamil Nadu',

இந்தத் திட்டமானது, இந்தப் புனல் மின்சாரத் திட்டமானது நிறைவேற்றப்படும் என்று சொன்னால், கோவை மாவட்டம் பெரிதும் நம்பியிருக்கின்ற அந்த பாண்டியாறு—புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டமானது வராமலேயே போய்விடும். காரணம், பாண்டியாறு—புன்னம்புழாவை, டனல் மூலமாக மேற்கு நோக்கித் திருப்பி, அதிலே இருந்து மின்சாரம் எடுப்பதற்காகத்தான்........

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. இதை எல்லா உறுப்பினர்களும் கவனிப்பதே நன்று.

திரு. வி. கே. லட்சுமணன் : டெண்டர் வரவழைக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு எல்லைக்குள்ளே இந்த சுரங்கம் அமைக்கப்படுவதால், தமிழக அரசினுடைய முன் அனுமதி பெற்று இந்த சுரங்கம் அமைக்கப்படுகிறதா ? தமிழக அரசுக்கு இது தெரியுமா ? இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் .

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவைக்கு எடுத்து வைத்து இருக்கிறார். அவர் ஆரம்பத்தில், வாழ்வா, சாவா என்று கேட்டார். புரட்சித் தலைவியின் ஆட்சியைப் பொறுத்தமட்டிலே என்றைக்கும் வாழ்வு தான் ; சாவு இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம் என்பது 1965 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை விவாதத்திற்கு எடுத்துக் கொடுள்ளப்பட்டு, பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு முதலமைச்சர்கள் இருந்த நேரத்திலும் சரி, பல்வேறு பொதுப் பணித் துறை அமைச்சர்கள் இருந்த நேரத்திலும் சரி இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவான விவாதம் நடைபெற்று இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகின்றேன்

1993 அக்டோபர் 29] (திரு. எஸ். கண்ணப்பன்)

1965-லேயும், அதற்குப் பின்னாலே, 1984-லேயும், அதற்கு முன்பு 1982-லேயும், அதற்குப் பின்னாலே 1989-லேயும் பேசப்பட்டு, இன்றைக்கும் நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலேயும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

முதலிலே இருந்த பிரச்சினை, இந்த பாண்டியாறு—புன்னம்புழா போன்ற நதிகளிலே வருகின்ற தண்ணீரை—தேவாலாபுழா ஆறும் இருக்கிறது.—நம்முடைய பகுதிக்கு எவ்வளவு நீரைத் திருப்பி விடுவது, கேரளாவுக்கு எவ்வளவு நீரைக் கொண்டு செல்வது. அதற்குப் பின்னாலே மின் திட்டங்களை யார் நிறைவேற்றுவது, பாசனப் பகுதிகளுக்கு எப்படி தண்ணீரைக் கொண்டு வருவது போன்ற மிக முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் இதிலே அடங்கி இருக்கிறது. இது ஒரு நாள், இரண்டு நாட்களிலே தீர்க்கின்ற பிரச்சினை அல்ல.

அது தவிர, காவிரி ஆற்றின் துணை நதியான பவானி ஆற்றினுடைய பிரச்சினையும் இதிலே வருகிறது. அதிலே 10 டி. எம். சி. தண்ணீரை தங்களுக்குத் தர வேண்டுமென்று கேரளாவிலே கேட்கிறார்கள். காவிரிப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலே, அதற்குள்ளே நாம் செல்ல முடியவில்லை. ஆகவே, பல்வேறு சூழ்நிலைகளில் பின்னிப் பிணையப்பட்டு அமைந்து இருக்கின்ற இந்தப் பாண்டியாறு— புன்னம்புழாத் திட்டத்திற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு ஒப்பந்தம் மூலம் 1985-லேயும் ஒரு பிரச்சினை கொண்டு வந்தார்கள். அதிலே, அவர்கள் மின்சார நிலையங்களை அமைத்து நம்முடைய தமிழகப் பகுதிகளிலே அமைக்கலாம் என்று ஒப்பந்தம் வந்தது. அதற்குப் பின்னாலே நம்முடைய கோவை மாவட்ட விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று, அவர்கள் நம்முடைய பகுதியிலே நீரைத் திருப்பி விட வேண்டுமென்று சொன்னதற்கு இணங்க, 3 நீர்த் தேக்கங்களைக் கட்ட வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பில் சொல்லப்பட்டது. ஆக, கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருக்கின்ற நிலையில் நிலையான முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு மாநிலத்தின் சார்பில் இன்வெஸ்டிகேஷன் Tender only for investigation not for construction நம்முடைய மாநிலத்திலேயும் சரி, அவர்களுடைய மாநிலத்திலேயும் சரி, இது சம்பந்தமாக ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். நமக்கு எவ்வளவு தண்ணீரைக் கொண்டு வருவது, எங்கே மின் நிலையம் அமைக்கலாம். எங்கே ஏரிகளைக் கட்டலாம், எங்கே முறைப்படுத்தி பாசனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு கால்வாய்களை அமைக்கலாம், எப்படி சுரங்கப் பாதை அமைக்கலாம்—It is under investigation. ஆகவே மத்தியிலே இருக்கின்ற நீர்வளக் குழுமமும் இதோடு இணைந்து செயல்படுகின்றது. It is an inter-state problem..

இரண்டு மாநிலங்களுக்கு இடையிலே இருக்கின்ற பிரச்சினை. ஆகவே, அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக டெண்டர் வெளியிட்டு இருக்கலாமே தவிர, எந்த ஒரு கட்டுமானமும், எந்த ஒரு சுரங்கப் பாதையும் அந்த தேவாளா பகுதியில் மாநில அரசினுடைய ஒப்புதல் பெறாமல் கட்ட முடியாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டு இருககிறேன். அப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை. அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்யலாம். அதைச் செய்து அந்த ரிப்போர்ட்டை மத்தியில் இருக்கிற அந்த குழு மத்திற்குக் கொடுக்கலாம். அதை அவர்கள் நம்மிடத்திலே கலந்து பேசுவதற்கு பயன்படுத்தலாம். இன்றைக்குக்கூட காவிரிப் படுகையிலே கர்நாடகாவிலே இருக்கின்ற வர்கள் வந்து இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். நாமும் பார்க்கிறோம் என்று கேட்டால், நம்முடைய பகுதி யில் இருக்கிற என்ஜினீயர்கள் போகிறார்கள். எக்ஸ்பர்ட்ஸ் போகிறார்கள். ஆகவே, மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வருகின்றபோது, அவர்கள் வந்து இனவெஸ்டிகேட் செய்யக் கூடாது என்று சொல்ல முடியாது. அதே நேரத்தில் நம்மிடத்திலே இருக்கின்ற என்ஜினீயர்கள் அங்கே சென்று அவர்களுடைய பகுதியிலே இன்வெஸ்டிகேட் செய்கிறார்கள் ஏனென்றால், அவர்கள் சொல்வதை நாம் கேட்க முடியாது. நாம் சொல்வதை அவர்கள் கேட்க மாட்டார்கள். எந்தத் தரப்பினரும் உள்ளே, ஒரு மாநிலத்தில் இருக்கின்ற பிரச்சினை களைப் பார்த்தால்தான் அதிலே சரியான முடிவுக்கு வர முடியும். அந்த அளவிலே, இன்வெஸ்டிகேஷன் என்று நீங்கள் சொல்கிறீர்கள். எங்களைப் பொறுத்த மட்டிலே எந்த விதமான தாக்கீதும். எங்களுடைய ஒப்புதலைப் பெறுவதற் காக, கன்ஸ்டிரக்ஷன் செய்வதற்கோ, கட்டுமானத்திற்கோ, வரவில்லை, அப்படி வந்தால் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கின்ற அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.30

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்வெஸ்டிகேஷன் செய்வதற்குக் கூட தமிழக அரசினுடைய அனுமதியை அவர்கள் பெற் றிருக்கிறார்களா என்பதைத் தான் அறிய விரும்புகிறேன். இந்த ஒப்பந்தத்தைப் பெற்றவர் எங்களுடைய மாவட்டத் தைச் சேர்ந்தவர். அவருடைய கூற்றுப்படி இந்த இன் வெஸ்டிகேஷன் செய்து, சாத்தியம் இருப்பதாக முடிவு எடுக்கப்படுமானால் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு, பாண்டி யாறு — புன்னம்புழா நீரே ஒட்டுமொத்தமாக கேரளாவிற்குத் திருப்பி விடப்பட்டு அதன்மூலம்

1993 அக்டோபர் 29] [திரு.வி.கே.லட்சுமணன்]

கோவை மாவட்டம் பாதிக்கப்படும் என்பதுதான் எங்களுடைய அச்சம். ஆகவே, தமிழக அரசுக்கு அவர்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக அனுமதி கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லப்படுகிற பணிகளை மேற்கொள்கிறபோது நம்முடைய மாநிலத்தில் அனுமதி பெறுவதில்லை. அரசோடு தொடர்பு கொண்டு அதிகாரிகள் அளவில் பேசுகிறார்கள். முக்கியமான பிரச்சினை என்று வருகிறபோது அதிலே ஒரு தெளிவான முடிவை எடுக்கிறபோது தான் அவர்களுக்கு அனுமதி தருகிறோம். ஆனால் பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் நீரை அவர்கள் பயன்படுத்துவது, நாம் 50 சதவீத நீரைப் பயன்படுத்துவது என்று ஏற்கெனவே ஒரு ஒப்பந்தம் வைத்தோம். அதிலே சில பிரச்சினைகள் வந்துவிட்டன. அவர்கள் சில கண்டிஷன்களைப் போட்டார்கள். நாம் சில கண்டிஷன்களைப் போட்டோம். அதிலே ஒத்துவரவில்லை. ஆகவே தான் இந்தப் பிரச்சினை 1965-ஆம் ஆண்டிலிருந்து,—இன்றைக்கல்ல, நேற்றைக்கல்ல, 1965ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை இழுத்துக் கொண்டே போகிறது. ஆகவே தான் இன்றைக்கு இன்வெஸ்டிகேஷன் செய்வதை மாத்திரம் வைத்து முடிவு செய்ய முடியாது. அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்தாலும் நம்முடைய அனுமதியைப் பெற வேண்டும். நாம் இந்தத் திட்டத்திற்கு கன்கரன்ஸ் கொடுக்க வேண்டும். அதிலே எந்த விதமான பிரச்சினையும் இருக்காது. நான் ஏற்கெனவே தெரிவித்தபடி எந்த ஆய்வு நடத்தப்பட்டாலும் நமக்கு தண்ணீர் வருகிற பிரச்சினை ஒப்பந்தம் முடிவான பிறகு தான் செயல்படுத்த முடியும். பாண்டியாறு—புன்னம்புழா; சோத்துப்புழா ஆறுகளுடைய ஒப்பந்தத்தை நாம் நிறைவேற்றிய பின்பு தான் அவர்கள் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும். ஆகவே, அதைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பின்னி ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கை குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பின்னி ஆலைப் பிரச்சினையைப் பற்றி அரசாங்கத்திடமிருந்து சில விளக்கங்களைக் கோர வேண்டுமென்று திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம்வழுதி ஆகியோர் என்னிடத்தில் ஒரு அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். இன்று காலை